Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 27 | உள்ளூர் - 27.01.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 27 | வெளியூர் - 28.01.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**2026-ல் எந்த ராசிக்கு திருமணம்? 'தடை' நீடிக்கும்?** | **ரயில்வேயில் 312 காலியிடங்கள்** | **"இனி அண்ணி" அல்ல "அம்மா" – பிரேமலதா!** | **ஜனநாயகன்: தொடரும் சிக்கல்!**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், மகளிர் விடியல் பயணம் மேற்கொள்ளும் வகையில் பத்து Pink பேருந்துகள், மகளிர் பாதுகாப்பிற்காக பயன்படுத்திடும் வகையில் மகளிர் காவலர்களுக்கான வாகனங்கள், மகளிருக்கான Pink ஆட்டோக்கள் ஆகியவற்றின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க.வெங்கடராமன், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## சிறுமிகளுக்கு இலவசமாக கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்…

சென்னை, ஜன. 27–

முதல்வர் ஸ்டாலின், தமிழ்நாட்டில், சிறுமிகளுக்கு இலவசமாக கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டத்தை இன்று தொடங்கி வைத்தார்.

இந்தியாவில் முதல்முறையாக சிறுமிகளுக்கு இலவசமாக கருப்பை வாய் புற்றுநோய் (HPV) தடுப்பூசி செலுத்தும் திட்டத்தைத் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த தடுப்பூசிக்கு தனியார் மருத்துவமனைகளில் ரூ.28 ஆயிரம் வரை செலவாகும் நிலையில், அரசு சார்பில் 14 வயதுக்கு உட்பட்ட 3.38 லட்சம் சிறுமிகளுக்கு இலவசமாக செலுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தை இன்று முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த திட்டம் முதல்கட்டமாக 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.




கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி (HPV தடுப்பூசி) என்பது மனித பாப்பிலோமா வைரஸ் தொற்றைத் தடுத்து, கருப்பை வாய் புற்றுநோயை 90% வரை தடுக்கும் ஒரு முக்கிய தடுப்பூசி.

இந்த தடுப்பூசி 9 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுமி மற்றும் சிறுவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பாலியல் செயல்பாட்டிற்கு முன் இந்தத் தடுப்பூசியை எடுத்துக்கொள்வது சிறந்த பாதுகாப்பை வழங்கும், இது 6 மாத இடைவெளியில் 2 அல்லது 3 டோஸ்களாக செலுத்தப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்:**

இது கருப்பை வாய் புற்றுநோய் மட்டுமின்றி, பிறப்புறுப்பு மருக்கள் மற்றும் HPV வைரஸால் ஏற்படும் பிற புற்றுநோய்களையும் தடுக்கிறது.

பொருத்தமான வயது: பொதுவாக 9–14 வயது சிறுமிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது, ஆனால் 26 வயது வரை உள்ளவர்களும் இதைப் போட்டுக்கொள்ளலாம்.

**டோஸ் முறை:**

9–14 வயது: 2 டோஸ்கள் (0 மற்றும் 6–12 மாதங்கள்).

15 வயதிற்கு மேல்: 3 டோஸ்கள் (0, 1–2, 6 மாதங்கள்).

வகைகள்: Gardasil, Gardasil 9, மற்றும் Cervarix ஆகியவை முக்கிய HPV தடுப்பூசிகள்.

பக்க விளைவுகள்: மிகவும் குறைவு. ஊசி போட்ட இடத்தில் வலி, வீக்கம், லேசான காய்ச்சல் மற்றும் தலைவலி போன்றவை ஏற்படலாம்.

பாதுகாப்பு: இந்த தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் உயிருள்ள வைரஸைக் கொண்டிருக்கவில்லை.

தடுப்பூசி போட்டிருந்தாலும், 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் கருப்பை வாய் புற்றுநோய்க்கான பரிசோதனைகளை (Pap smear or HPV test) வழக்கமாகச் செய்து கொள்வது அவசியம்.

## 2026 பட்ஜெட்டில் தட்றோம்..

# 2030-ல தூக்குறோம்…!


## நிர்மலா சீதாராமனின் மாஸ்டர் பிளான்..!!

டெல்லி, ஜன. 27–

மத்திய பட்ஜெட் நெருங்கி வரும் நிலையில், இந்தியாவை உலகின் முன்னணி Brain Hub ஆக மாற்றும் திட்டத்தை மத்திய அரசு இந்த பட்ஜெட் வாயிலாக கையில் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்ப துறை வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் வேளையில், இந்த வேகத்திற்கு இந்திய டெக் துறையும், மக்களும் வருகிறார்களா என்றால்..? இல்லை என்பது தான் இதற்கான பதிலாக இருக்கிறது. இந்திய பொருளாதாரத்தில் முக்கிய தூணாக இருக்கும் ஐடி துறை தற்போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் இதேவேளையில் இந்தியாவில் குளோபல் கேபபிலிட்டி சென்டர்கள் (GCC) என்படும் வெளி நாட்டு நிறுவனங்களின் கிளைகளை அமைப்பதில் இந்தியா முக்கிய இடமாக உள்ளது.

ஒருபக்கம் குறைந்த செலவில் கிடைக்கும் ரியல் எஸ்டேட் வசதிகள், குறைந்த சம்பளத்தில் திறன்வாய்ந்த ஊழியர்கள் கிடைக்கும் சந்தை என்பதால் இந்தியா உலகளாவிய GCC சந்தையில் முக்கியமானதாக மாறியுள்ளது. இதன் மூலம் இனி வரும் காலத்தில் குறைந்த செலவில் ஐடி சேவை அளிக்கும் ஒரு பேக் ஆஃபீஸ் சந்தையாக மட்டுமே இல்லாமல் GCCகள் மூலம் இப்போது உயர் மதிப்பு கொண்ட இன்னோவேஷன் மையங்களாக மாற உள்ளன. இதுமட்டுமா.. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1 சதவீதத்திற்கு மேல் GCC பங்களிக்க துவங்கியுள்ளது. மேலும் சேவை துறை ஏற்றுமதியில் ஜிசிசி சுமார் 20 சதவீதம் பங்களிக்கிறது. இதன் மூலம் இந்திய ஜிசிசி துறை 2030 இறுதிக்குள் 100 பில்லியன் டாலர் வருவாய் இலக்கை நோக்கி செல்கிறது. இதனால் ஜிசிசி துறையின் வேகமான வளர்ச்சிக்கும், தொடர்ந்து திறன்வாய்ந்த ஊழியர்களின் எண்ணிக்கையை இந்தியாவில் அதிகரிக்கும் முடிவுடன், 2026 பட்ஜெட்டில் பெரிய அளவிலான திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2025 பட்ஜெட்டில் அறிவித்த நேஷனல் ப்ரேம்வொர்க் பயன்படுத்தி இந்திய மக்களின் திறன்மேம் பாட்டில் முக்கிய திட்டத்தை அறிவிப்பார் என்று தெரிகிறது. அந்த கட்ட மைப்பு GCCகளை நாடு முழுவதும் 2ஆம் நிலை நகரங்களுக்கு விரிவுபடுத்த தேவையான உள்கட்டமைப்பு மற்றும் திறன்வாய்ந்த ஊழியர்கள் கிடைப்ப தற்கான வழிவகை செய்கி றது. அவ்வபோது மத்திய அரசு திறன் மேம்பாடு குறித்து அறிவித்து வரு வதை மக்க ளும், இளை ஞர்களும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். எப்படி 1990களில் ஜாவா படித்தால் வாழ்க்கை செட்டில் ஆகிவிடலாம் என்ற நம்பிக்கை கொடுக்கப்பட்டதோ அதே போல் தற்போது அடுத்த தலைமுறை தொழில் நுட்பத்தில் மாணவர்கள் மத்தியில் திறன்மேம் பாட்டுக்கான பணிகள் மேற்கொ ள்ளப்பட்டு வருகிறது. எனவே திறன் மேம்பாடு தான் இந்தியாவின் அடுத்தக்கட்ட டெக் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கப்போகிறது. ஆனால் இந்த திறன் மேம்பாடு பள்ளிகளில் இருந்து துவங்குமா, கல்லூரிகளில் இருந்து துவங்குமா என்பது முக்கிய கேள்வி.

இந்தியா, உலகின் சுமார் 17 சதவீத GCCகளை கொண்டுள்ளது. ஆனால் திறன் பற்றாக்குறை பெரிய சவாலாக உள்ளது. GCCகளில் பாதிக்கும் மேற்பட்டவை திறன்வாய்ந்த ஊழியர்களை தக்க வைப்பதை மிகப்பெரிய கவலையாக கூறுகின்றன. AI, டேட்டா அனாலிட்டிக்ஸ், க்ளவுட், பிளாட்ஃபார்ம் இன்ஜினியரிங் போன்ற மேம்பட்ட பணிகளுக்கு தேவை அதிகரித்துள்ளது. சமீபத்தில் வெளியான ஆய்வுகள் படி AI மற்றும் அனாலிட்டிக்ஸில் 40 சதவீதத்திற்கு மேல் திறன் பற்றாக்குறை இந்தியாவில் உள்ளது, இதேபோல் பிளாட்ஃபார்ம் இன்ஜினியரிங்கில் 39 சதவீதம், க்ளவுட் மற்றும் உள்கட்டமைப்பில் 25 சதவீதம் திறன் இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை சரிசெய்ய 2026 பட்ஜெட் முக்கிய வாய்ப்பாக பார்க்கப்படுகிறது. இலக்கு சார்ந்த திறன் பயிற்சி திட்டங்கள் மூலம் இளம் பணியாளர்களின் திறனை முழுமையாக பயன்படுத்தி, உயர் மதிப்பு டிஜிட்டல் பணிகளில் அமர்த்துவது மூலம் இந்திய பொருளாதாரத்திற்கு புதிய ஊக்கத்தை கொடுக்கும். GCCகள் இப்போது வெறும் IT சேவைகளுக்கு அல்ல; இவை இந்தியாவின் பொரு ளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. திறன் மேம்பாட்டுக்கு பெரிய ஒதுக்கீடு செய்வதன் மூலம் அரசு இந்த துறையின் வளர்ச்சியை துரிதப்படுத்தலாம். டயர்–2 நகரங்களில் GCCகள் அதிகரிப்பதால் உள்ளூர் வேலைவாய்ப்புகள் உருவாகும். பொருளாதாரத்தில் இருக்கும் வித்தியாசத்தை சமன் செய்யலாம்.

## இணையும் ஓ.பி.எஸ்.- இபிஎஸ்…!

சென்னை, ஜன. 27–

தற்போது உள்ள தேர்தல் சூழ்நிலையில், ஓ.பன்னீர் செல்வதை தேசிய ஜனநாயக கூட்டணியில் கொண்டுவர பெரும் முயற்சி மூலம் பிரதமர் மற்றும் அமித்ஷா தலையீட் டால் முடிவுக்கு வர உள்ளது. டி டி வி தினகரன் மூலம் இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓபிஎஸ். ஐ நேரடியாக அதிமுகவில் இழுத்து கொள்ள இபிஎஸ் இதுவரை அனுமதிக்க வில்லை. அவர் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடவும் விரும்ப வில்லை. டிடிவி தினகரனின் தலையீட்டால் ஓபிஎஸ் போடி தொகுதியில் குக்கர் சின்னத்தில் போட்டியிடு வதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. மேலும் அவருடைய



ஆதரவாளர்கள் அனைவரும் மாற்றுக்கட்சி க்கு சென்றுள்ள நிலையில் 3 தொகுதிகளில் போட்டியிடு வதாக தகவல்கள் தெரி விக்கின்றன. நீண்டகால அ.தி.மு.க.வில் கோல் ஆட்சி செய்து வந்த போட்டியில் பா.ஜ.க.வுடனோ, விஜயுடனோ, தி.மு.க.வுடனோ சேர்வதற்கு வாய்ப்பில்லை. இவர் அ.தி.மு.க.வில் நேரடியாக இணைய வாய்ப்பில்லை என்பதால் தேசிய ஜனநாயக கூட்டணிக்குள் டிடிவி தினகரன் இணைந்துள்ளது போல் ஓபிஎஸ் கூட்டணிக்குள் வர இபிஎஸ் சம்மதம் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், உலக வங்கியின் ரூ. 1,185 கோடி நிதியுதவியுடன் ரூ.5000 கோடி மதிப்பீட்டிலான தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.போ.அன்பரசன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதல், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பி. செந்தில் குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் ஆஷா அஜித், உலக வங்கி மண்டல இயக்குநர் செம்பெட்டே, ஐ.நா. பெண்கள் அமைப்பின் பிரதிநிதி காந்தா சிங், மொரிசியஸ் முன்னாள் தலைமை கொறடா நவீனா ரப்யாத், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மல்லிகா ஸ்ரீனிவாசன், தொழில்துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பங்காளர்கள், பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 27.01.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 13-ம் தேதி

## டிராகனும் யானையும் ஒன்றாக "நடனமாடுகிறார்கள்"



இந்தியா தனது 77வது குடியரசு தினத்தை இன்று கொண்டாடும் நிலையில், சீன அதிபர் ஜி ஜின்பிங் குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். ஆசியாவிலேயே மிகப்பெரிய வல்லரசு நாடுகளாக இருக்கும் இந்தியா சீனா மத்தியிலான உறவில் கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்த நிலையில் ஜி ஜின்பிங் வாழ்த்தில் வந்த செய்தி இரு நாடுகளுக்கிடையேயான உறவில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜி ஜின்பிங் தனது செய்தியில் இந்தியாவையும் சீனாவையும் "நல்ல அண்டை நாடுகள், நண்பர்கள் மற்றும் கூட்டாளிகள்" என்று குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டில் இரு நாடுகளுக்கிடையேயான உறவு மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும், இரு நாடுகளின் நடப்பு உலக அமைதி மற்றும் செழிப்புக்கு முக்கியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலக நாடுகள் இந்தியா, சீனா வளர்ச்சியை "Dragon and the Elephant dancing together" என அழைப்பது வழக்கம், இதையும் தனது செய்தியில் பயன்படுத்தி ஜி ஜின்பிங் கூறியுள்ளார். இது சீனாவை டிராகனாகவும் இந்தியாவை யானையாகவும் குறிக்கப்படும் வேளையில், இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட்டால் பெரும் நன்மைகள் கிடைக்கும் என்று இதன் மூலம் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரு நாடுகள் மத்தியிலான தொடர்புகளை அதிகரிக்கவும், ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும், இரு நாடுகள் மத்தியில் இருக்கும் பிரச்சனைகளை தீர்க்கவும் முயற்சி செய்ய வேண்டும் என்று ஜி ஜின்பிப் தனது செய்தியின் வாயிலாக விருப்பம் தெரிவித்துள்ளார். வர்த்தக கூட்டணி சமீபத்தில் சீன இந்தியாவுக்கு தொழில்நுட்ப பரிமாற்றம் கொண்ட முதலீடுகளுக்கும், கூட்டணிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இந்த நிலையில் குடியரசு தின வாழ்த்தில் சீனா மாறுப்பட்ட நிலைப்பாட்டை வைத்திருக்கும் வேளையில் இந்தியாவுக்கு புதிய கதவுகள் திறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மட்டும் அல்லாமல் சீனா தற்போது கனடா உடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வரும் வேளையில் சீனா புதிய பாதையை தேர்வு செய்துள்ளதாக தெரிகிறது.

இந்தியா–சீனா இந்தியாவும் சீனாவும் அணு ஆயுதம் கொண்ட நாடுகள், இரு நாடுகளுக்கும் இடையே 3,800 கிலோமீட்டர் நீளமான எல்லை உள்ளது, இந்த எள்லை நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகிறது. 2020ஆம் ஆண்டு கிழக்கு லடாக்கில் ஏற்பட்ட மோதலில் இரு தரப்பு ராணுவ வீரர்களும் உயிரிழந்தனர். இதனால் இன்றளவும் எல்லை பகுதிகள் அதிக ராணுவ கட்டமைப்புகள் உடன் உள்ளது. ஆனால் கடந்த ஆண்டு முதல் உறவில் படிப்படியான மேம்பாடு ஏற்பட்டுள்ளது. உயர்மட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை, நேரடி விமான சேவைகள் மீண்டும் தொடங்கியது, வர்த்தகம் மற்றும் முதலீடு அதிகரித்தது ஆகியவை இதற்கு சான்றாக உள்ளன. இவை இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை மீண்டும் அமைதியான பாதையில் கொண்டு செல்லும் முயற்சிகளாக பார்க்கப்படுகிறது. இரு நாடுகளின் ஒத்துழைப்பு முக்கியத்துவம் ஜி ஜின்பிங் தனது செய்தியில் உலக அமைதி மற்றும் செழிப்புக்கு நிலையான இந்தியா–சீன உறவு அவசியம் என்று கூறியுள்ளார். இரு நாடுகளும் ஆசியாவின் மிகப்பெரிய பொருளாதார சக்திகளாக உள்ளன. அவை ஒன்றிணைந்து செயல்பட்டால் பிராந்திய மற்றும் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். கடந்த காலத்தில் பதற்றங்கள் இருந்தபோதிலும், தற்போது ஏற்பட்டுள்ள நல்ல மாற்றம் இரு நாட்டு மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கிறது.

## ஆலோசனைக் கூட்டம்!



பழனி, ஜன. 27–

பழனி புது தாராபுரம் சாலை பகுதியில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில், பாரதிய ஜனதா கட்சி சார்பில் 2021 ஆம் ஆண்டு திமுக கட்சி தனது தேர்தல் வாக்குறுதியாக பழனியை தனி மாவட்டமாக பிரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இது நாள் வரை பழனியை தனி மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. இதையொட்டி பழனியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு மாநில செயற்குழு உறுப்பினர் கனகராஜ், தலைமை தாங்கினார். இதில் தேசிய பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் திருமலைசாமி, மாவட்ட பொதுச் செயலாளர் செந்தில்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பழனி நகர தலைவர் ஆனந்தகுமார், கிழக்கு ஒன்றிய தலைவர் பிரகாஷ், மேற்கு ஒன்றிய தலைவர் கவிதா, பொருளாளர் ஆன ந்த்பெருமாள், ஆகியோர் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். கூட்டத்தில் வரும் பிப்ரவரி மாதம் 10ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், அதில் முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பங்கேற்க இருக்கிறார் என்றும், கூறப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 25ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவும். அதற்கான முன்னேற்பாடுகளை கட்சியினர் செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கள்ளிமந்தையம் ஊராட்சியில் கிராமசபை கூட்டம்!





ஒட்டன்சத்திரம், ஜன. 27–

திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் கள்ளிமந்தையத்தில் குடியரசு தினத்தில் கிராம சபை கூட்டம் தொப்பம்பட்டி ஆணையாளர் பி.எம்.குமரன் தலைமையில் நடைபெற்றது. இக்கிராம சபையில் கலைஞரின் கனவு இல்லம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தொழுநோய் எதிர்ப்பு உறுதிமொழி, ஊராட்சியில் நடைபெறும் பணிகள் மற்றும் முழு சுகாதாரம், பொது சுகாதாரம், கால்நடை வளர்ப்பு, மழைகாலத்தில் எதிர்கொள்ளும் பணிகள், குழந்தைகள் பாதுகாப்பு, உங்க கனவை சொல்லுங்க உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்த தீர்மானங்களை கள்ளிமந்தையம் ஊராட்சி செயலர் நல்லதம்பி கிராம சபையில் வாசித்து தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன. இக்கிராம சபை கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் பி.சி.தங்கம், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கவிதா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கணேசன், துணைத் தலைவர் ராஜேஷ் குமார், கிராம நிர்வாக அலுவலர் பொன்ராஜ், கிராம சுகாதார செவிலியர் சுதா, அங்கன்வாடி பணியாளர்கள் ராஜேஸ்வரி, ராணி, ராமுத்தாய், கிராம ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பழனி தைப்பூச கொடியேற்றத்தில் பிரமுகர்கள்!



பழனி, ஜன. 27–

பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் நேற்று தைப்பூசம் திருவிழாவை யொட்டி கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கியது. இதில் சந்திரரும், சூரியரும், வேலும், மயிலும், பொறித்த கொடி வேத மந்திரங்கள் முழங்க ஏற்றப்பட்டது. முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் புதுச்சேரி சப்பரத்தில் வீற்றிருந்தார். பின்பு சிறப்பு பூஜையும் சிறப்பு தீபாராதனையும் நடைபெற்றது. கொடியேற்று விழாவில் பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியன், சித்தநாதன் சன்ஸ் விபூதி ஸ்டோர் எஸ் ஜி சிவனேசன், எஸ் ஜி தனசேகர், எஸ் ஜி பழனிவேல், ஸ்ரீ கந்த விலாஸ் உரிமையாளர்கள் என் செல்வகுமார், எஸ் நவீன்விஷ்ணு, எஸ் நரேஷ் குமரன், சரவணப் பொய்கை கந்த விலாஸ் உரிமையாளர் என் பாஸ்கரன், கண்பத் கிரேண்ட் அதிபர் என் ஹரிஹரமுத்து, முன்னாள் எம்எல்ஏ வேணுகோபாலு, நகர அதிமுக செயலாளர் முருகானந்தம், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரிய நாயகி கல்வி அறக்கட்டளை சுந்தரம், சாய் கிருஷ்ணா மருத்துவமனை சுப்புராஜ், விஸ்வ ஹிந்து பரிஷத் செந்தில்ஜி, திண்டுக்கல் எஸ் கே சி சண்முகவேல், செங்குந்த தர்ம பரிபாலான சங்க பரமசிவம், மணிகண்டன், அறங்காவலர்கள் தனசேகர், பாலசுப்பிரமணி, அன்னபூரணி, பாலசுப்பிரமணியம், தாராபுரம் பெரியசாமி, செல்வகுமார், முத்துக்குமார், நாகையா, வீரமணி, முருகன், குமரேசன், எம்ஜிஆர் கருப்புசாமி, ஆகியோர் பங்கேற்றனர்.

## பழனியில் குடியரசு தின விழா: காங்கிரஸ் கமிட்டி சார்பாக கொண்டாட்டம்!



பழனி, ஜன. 27–

பழனியில் 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு. நகர காங்கிரஸ் கமிட்டி மேற்குமண்டல காங்கிரஸ் கமிட்டி சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தலைமையாக நகர தலைவர் கே.முத்துவிஜயன், மேற்கு மண்டல தலைவர் வி. வீரமணி முன்னிலையாக, மாவட்டத் துணைத் தலைவர் எம்.முருகானந்தம், சொத்து பாதுகாப்பு குழுவினர் சுந்தர், ராமநாத கிருஷ்ணன், சிறுபான்மை பிரிவு முகமது அலி, மேலும் ராஜீவ் காந்தி அறக்கட்டளை மாவட்ட தலைவர் செந்தில்குமார், மாவட்ட செயலாளர் பிரேம்குமார், கண்மணி மெஸ் தியாகராஜன், ஓ பி சி துறையின் மாநில செயலாளர் சாயிராபானு, நல்லு என்ற கனகராஜ், எஸ் சி எஸ் டி பிரிவு மாவட்ட தலைவர் குப்புசாமி, சமூக ஊடகப்பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் நெய்காரபட்டி பாலதண்டபாணி, மேற்கு வட்டாரத் தலைவர் முத்தையன், மண்டல துணைத் தலைவர் சேக், ரயில்வே சுப்ரமணி, தேவஸ்தான சுப்பிரமணி, ஆயக்குடி சுப்ரமணி, ஆத்திக்கண்ணன், பாலசமுத்திரம் முருகானந்தம், சிறுபான்மை பிரிவு நகர தலைவர் அக்கீம் சாகுல் ஹமீது, பெரியப்பா நகர் பாண்டி, இலக்கிய அணி ராஜேந்திரன், மண்டல துணைத் தலைவர் குமரவேல், சரவணன் லோகநாதன்,

எஸ். பி. என் நஸ்ருல், ஆட்டோ பிச்சைமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ராசிபுரம் ஸ்ரீ பொன் வரதராஜ பெருமாள் கோவில் கும்பாபிஷேகம்: முன்னேற்பாடு பணிகள் தீவிரம்!






ராசிபுரம், ஜன. 27–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ பொன் வரதராஜ பெருமாள் திருக்கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான முன்னேற்பாடு பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. ஆய்வு மற்றும் ஆலோசனைக் கூட்டம்

விழாவிற்கு வருகை தரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்யும் வகையில், முக்கிய அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் இன்று கோவில் வளாகத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது: மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை அதிகாரிகள்: கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும், வாகன நிறுத்த வசதிகள் மற்றும் பாதுகாப்பு வழங்கவும் தேவையான திட்டங்களை வகுத்தனர். திருக்கோவில் அறங்காவலர் குழு: கோவில் உட்புறப் பணிகள் மற்றும் சடங்குகள் குறித்த விவரங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தொழில் அதிபர்கள் பங்கேற்பு: ராசிபுரத்தைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபர்கள் திரு. பிரபாகரன் மற்றும் திரு. சங்கர் ஆகியோர் அதிகாரிகளுடன் இணைந்து, பக்தர்களுக்கான குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனைகளை வழங்கினர்.



## 2026-ல் எந்த ராசிக்கு திருமணம் முடியும்? 'திருமண தடை' நீடிக்கும்?



வேத ஜோதிட நிபுணர்களின் கணிப்புப்படி 2026–ஆம் ஆண்டு குருவின் விரிவாக்கம், சனியின் முதிர்ச்சி மற்றும் ராகு – கேது கிரகங்களின் கர்ம வினை தாக்கம் நிறைந்து காணப்படுகிறது. குறித்த இந்த கிரகங்களின் தாக்கம் மேஷம் முதல் மீனம் வரை உள்ள அனைத்து ராசியினரின் திருமண வாழ்க்கையிலும் திருப்பத்தை கொண்டு வரும் என கூறுப்படுகிறது. அந்த வரிசையில், எந்த ராசிக்கு என்ன பலன் கிடைக்கும்? திருமண வாழ்க்கை எப்படி அமையும்? என்பது குறித்து நாம் காணலாம்!

மேஷம் – சாதகமான மாற்றம்!



திருமண காரியங்கள் குறித்து பேசுகையில், மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த 2026–ஆம் ஆண்டு சாதகமான ஒரு காலத்தை கொண்டு வரும். அதாவது, நடப்பு ஆண்டின் தொடக்கத்திலேயே திருமண காரியங்கள் கைகூடும். ஏற்கனவே திருமணம் முடித்த நபர்களின் வாழ்க்கையில் வலுவான பிணைப்பு உண்டாகும். கணவன் – மனைவி இடையே காணப்பட்ட மனஸ்தாபங்கள், கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வரும் என நிபுணர்கள் கணித்துள்ளனர்!

ரிஷபம் – முதல் பாதியில் முடித்திடுங்கள்!

ரிஷப ராசி கொண்டவர்களுக்கு இந்த ஆண்டு திருமணத்திற்கு சாதகமான ஒரு காலமாகவே பார்க்கப்படுகிறது.



இருப்பினும், ஆண்டின் முதல் பாதியில் திருமணத்தை முடிக்க முயற்சி செய்வது நல்லது. காரணம், இரண்டாம் பாதிக்கு திருமணத்தை தள்ளிப்போட அடுத்த ஆண்டு வரையில் திருமணம் தள்ளிப்போகலாம். அதாவது, திருமண காரியங்கள் மீண்டும் தள்ளிப்போகலாம். எனவே, காலம் தாழ்த்தாது திருமணத்தை முடிப்பது நல்லது.

மிதுனம் – தீர்வு கிடைக்கும்!


மிதுன ராசி கொண்டவர்களின் திருமண வாழ்க்கையில் காணப்பட்ட



பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும் ஒரு ஆண்டாக இது பார்க்கப்படுகிறது. குருவின் செல்வாக்கு, உங்கள் திருமண காரியங்களை சாதகமாக்குகிறது. சரியான திட்டமிடலுடன் இந்த 2026–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் திருமண காரியங்களை முடிவு செய்யுங்கள், உங்கள் எதிர்பார்ப்பின் படி திருமணத்தை முடித்திடுங்கள். காதல் திருமணம் செய்ய விரும்பும் நபர்களுக்கு நண்பர்கள், பெற்றோர் ஆதரவு கிடைக்கும்.

கடகம் – காதல் திருமணம்!

கடக ராசி கொண்டவர்களுக்கு 2026–



ஆம் ஆண்டு திருமணத்திற்கு சாதகமான ஒரு காலத்தை கொண்டு வருகிறது. ஆண்டின் முதல் பாதியில் உங்கள் திருமண காரியங்கள் கைகூடும். குறிப்பாக, காதல் திருமணத்திற்கு பச்சை கொடி கிடைக்கும். பெற்றோர் ஆதரவுடன் உங்கள் திருமணத்தை விரைவில் முடிக்கும் வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். ஆன்மீகத்துடன் தொடர்பு கொண்ட நபர்கள், கூடுதல் நன்மை பெறும் ஒரு காலமாகவும் இது பார்க்கப்படுகிறது.

சிம்மம் – மகிழ்ச்சி!

சிம்ம ராசியில் பிறந்தவர்களின்



திருமணம் குறித்து பேசுகையில், நடப்பு 2026–ஆம் ஆண்டு முழுவதும் சாதகமான ஒரு காலமாக பார்க்கப்படுகிறது. புதிதாக திருமணம் செய்ய இருக்கும் காதல் ஜோடிகளுக்கு மட்டும் அல்ல, ஏற்கனவே திருமணம் முடித்த தம்பதியருக்கும் சாதகமான ஒரு காலமாக இந்த ஆண்டு இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பலரின் உதவியுடன் உங்கள் திருமணத்தை சிறப்பாக செய்து முடிக்கும் வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

கன்னி – எதிர்பாராத சந்திப்பு!

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த



ஆண்டு காதல் திருமணத்திற்கான ஒரு ஆண்டாக இருக்கும். அதிலும் குறிப்பாக, காதல் துணை இன்றி சிங்கிளாக இருக்கும் நபர்கள், தங்கள் குணத்திற்கு பொருத்தமான நபர் ஒருவரை நடப்பு ஆண்டில் சந்திப்பார்கள் – விரைவில் அவருடன் காதல் உறவை தொடங்குவார்கள். இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்த உறவு திருமணத்தில் முடியும் வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

துலாம் – தடைகள் நீடிக்கும்!



கிரக தோஷத்தின் காரணமாக திருமண தடைகளை சந்தித்து வரும் துலாம் ராசி ஆண்களுக்கு, நடப்பு 2026–ஆம் ஆண்டில் தடை காலம் நீடிக்கும் ஒரு ஆண்டாகவே இருக்கும். இரண்டாம் பாதியில் சூழ்நிலைகள் சற்று சாதகமாக மாறும். வாழ்க்கை உங்கள் விருப்பம் போல் மகிழ்ச்சியாக இருக்கும் – கவலை வேண்டாம். ஏற்கனவே திருமணம் முடித்தவர்கள் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியான தருணங்கள் உண்டாகும். நம்பிக்கையுடன் இருங்கள்.



விருச்சிகம் – மங்களகரமான ஆண்டு!

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு நடப்பு 2026–ஆம் ஆண்டு மங்களக ரமான ஒரு ஆண்டாக இருக்கும். அதிலும் குறிப்பாக, திருமண காரியங்கள் குறித்து பேசுகையில் ஆண்டின் முதல் பாதியில் மங்களகரமான விஷயங்கள் நடக்கும், உங்கள் மனம் விரும்பும் அந்த ஒரு நபரை திருமணம் செய்யும் வாய்ப்பும் கிடைக்கும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.



தனுசு – கலவையான பலனகள்!

தனுசு ராசியில் பிறந்தவர்களின் திருமண காரியங்கள் குறித்து பேசுகையில், ஆரம்பத்தில் சிறிய தடைகளை சந்திப்பீர்கள் – பின் சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக மாறும். உறவினர் வழியே உங்கள் குணத்திற்கு பொருத்தமான வரன் கிடைக்க, 2026–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் உங்கள் திருமணம் வெற்றிகரமாக முடியும். ஏற்கனவே திரும ணம் முடித்தவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணங்கள் நிறைந்திருக்கும்!



மகரம் – முதல் பாதியில் முடிப்பது நல்லது!

மகர ராசியினருக்கு இந்த திருமண காரியங்கள் சாதகமான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டின் முதல் பாதியில் திருமணத்தை முடிப்பது நல்லது. காரணம், இரண்டாம் பாதியில் உங்கள் திருமணத்தை முடிக்க முடியாத அளவுக்கு பணியிடத்தில் பிரச்சனைகள் அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கையிலும் பொறுப்புகள் கூடும். தனிப்பட்ட வாழ்க்கை லட்சியத்தை நோக்கி வெளியூர் – வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். எனவே, நேரத்தை வீண்டிக்காதீர்கள்!



கும்பம் – காத்திருங்கள்!

கும்ப ராசி கொண்ட வர்களின் திருமண காரியங்கள் குறித்து பேசுகையில், நடப்பு 2026–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் உங்களுக்கு சாதகமாக மாறும். ஆரம்பத்தில் பிரச்சனைகள் காணப்படும் நிலையிலும், ஆண்டின் இறுதியில் சூழ்நிலை உங்களுக்கு ஏற்றப்படி மாறும். எனவே, காலம் வரும் வரை காத்திருப்பது நல்லது. ஏற்கனவே திருமணம் முடித்தவர்கள், தங்கள் உறவில் காணப்பட்ட பிரச்சனைகள் மற்றும் மனஸ்தாபங்களுக்கு தீர்வு காணும் ஒரு தினமாகவும் இந்த ஆண்டு பார்க்கப்படுகிறது!

மீனம் – பொறுமை யாக இருங்கள்!




குருவின் ஆசி உங்கள் திருமண எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்கிறது. உங்கள் குணத்திற்கு ஏற்ற நபரை இந்த ஆண்டு சந்திப்பீர்கள், அவருடன் தொடங்கும் காதல் உறவு விரைவில் திருமணத்தில் முடியும். குறிப்பாக, பெற்றோர் ஆதரவுடன் உங்கள் திருமணத்தை முடிக்கும் வாய்ப்பு காணப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் காணப்பட்ட மனஸ்தாபங்கள், பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரும் வாய்ப்புகளும் காணப்படுகிறது. நம்பிக்கையுடன் இருங்கள்!

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# வயதுக்கு ஏற்ப எவ்வளவு நேரம் தூங்க வேண்டும்?




போதுமான உறக்கத்துடன், வைட்டமின் டி–யும் குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.. சிறு வயதிலேயே தூக்கமின்மை மற்றும் வைட்டமின் டி குறைபாடு போன்ற பிரச்சனைகள் குழந்தையின் எதிர்கால ஆரோக்கியத்தில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கின்றனர்..

இந்த இரண்டு காரணிகளையும் பெறறோர்கள் அலட்சியம் செய்யக்கூடாது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 12 முதல் 16 மணி நேரம் தூக்கம் தேவை, அதே சமயம் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 8 முதல் 14 மணி நேரம் தூக்கம் தேவை. குழந்தைகள் ஒரு நாளின் பாதியளவு நேரம் தூங்குவது, அவர்களின் மூளை சரியாக வளர்ச்சி அடைவதற்கு அவசியம்..

தூக்கத்தின் போது மூளையில் உள்ள நரம்பு செல்களுக்கு இடையே புதிய இணைப்புகள் உருவாகின்றன என்றும், இது எதிர்காலத்தில் சிந்திக்கும் திறன், நினைவாற்றல் மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன்களை மேம்படுத்தும். போதுமான தூக்கம் பெறும் குழந்தைகள் மனதளவில் அமைதியாக இருப்பது மட்டுமல்லாமல், அவர்கள் வளர்ந்த பிறகும் சிறந்த மன ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்..

தூக்கமின்மை குழந்தைகளிடம் எரிச்சல், கவனக்குறைவு மற்றும் வளர்ச்சி குன்றுதல் போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் என்று அவர் கூறினார். எனவே, தங்கள் குழந்தைகள் ஒரு வழக்கமான தூக்க அட்டவணையைப் பின்பற்றுவதை பெற்றோர்கள் உறுதி செய்வது மிகவும் முக்கியம். அதே நேரத்தில், குழந்தைகளின் எலும்புகள் மற்றும் தசைகளின் ஆரோக்கியத்தில் வைட்டமின் டி–யின் பங்கு மிகவும் முக்கியமானது என்று அவர் கூறினார். வைட்டமின் டி உடலில் கால்சியம் உறிஞ்சப்படுவதற்கு உதவுகிறது மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்துகிறது.

சிறு வயதிலேயே வைட்டமின் டி குறைபாடு ஏற்பட்டால், உடல் வளர்ச்சி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்று அவர் எச்சரித்தார். வைட்டமின் டி குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு மூட்டு வலி, தொடர் சோர்வு, முடி உதிர்தல் மற்றும் காயங்கள் மெதுவாக ஆறுதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இந்த அறிகுறிகள் குழந்தையின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று அவர் கூறினார். காலை வேளையில் சிறிது நேரம் குழந்தைகளை வெயிலில் நிற்க வைப்பதன் மூலம் அவர்கள் இயற்கையாகவே வைட்டமின் டி–யைப் பெறலாம்.

சிறு வயதிலேயே சரியான தூக்கப் பழக்கங்கள், சமச்சீர் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவர்களின் ஆலோசனைப்படி வைட்டமின் டி சப்ளிமெண்ட்ஸ் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வளர முடியும் என்று அவர் கூறினார். பெற்றோர்கள் இந்த விஷயங்களில் விழிப்புணர்வை அதிகரித்து, தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு இப்போதே ஒரு வலுவான அடித்தளத்தை அமைக்க வேண்டும் என்றும் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்..

# பழனியில் த.மா.கா சார்பில் கொண்டாட்டம்!



பழனி, ஜன. 27–

பழனியில், 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு, பழனி நகர தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, கட்சி அலுவலகத்திலும், தலைமை தபால் நிலைய அலுவலகம் அருகிலும், தேசியக்கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகர தலைவர் ஆர். சண்முகநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் கனகசபாபதி, மாவட்ட இளைஞர் அணி தலைவர் சுந்தரபாண்டியன், வட்டாரத் தலைவர் சுந்தரராஜன், ராஜேந்திரன், பாலு, நாகேஸ்வரன், மாவட்ட செயலாளர் அருண், நகரத் துணைத் தலைவர் திருஞானசம்பந்தம், கோபால், நகரச் செயலாளர் மாரியப்பன், மணி, நகரப் பொருளாளர் பாஸ்கரன், நெய்க்காரப்பட்டி பேரூர் தலைவர் சண்முகவேல், தொப்பம்பட்டி மேற்கு வட்டாரத் தலைவர் சிவசுப்பிரமணி, கீரனூர் பேரூர் தலைவர் காட்டப்பன், ஆயக்குடி பேரூர் தலைவர் நாட்டுதுரை, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சோழவந்தான் எம் வி எம் கலைவாணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பள்ளி தாளாளர் எம் மருது பாண்டியன் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். தொழிலதிபர் மணி முத்தையா நிர்வாகி வள்ளிமயில் முதல்வர் தீபா ராகினி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டின் முதல் 800 மெகாவாட் அனல் மின் நிலையம்: வடசென்னை NCTPS வணிக உற்பத்தி தொடக்கம்...

சென்னை, ஜன. 27–

தமிழ்நாட்டின் முதல் 800 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையமான வடசென்னை அனல் மின் நிலையம் (NCTPS) மூன்றாம் கட்டம், ஜனவரி 24 முதல் வணிக உற்பத்தி நிலைக்கு (Commercial Operation) கொண்டு வரப்பட்டுள்ளது.



இந்த அனல் மின் நிலயத்தின் மின் உற்பத்தி முழுத் திறன் கொண்டதாக அமைக்கட்டு 18 மாதங்களுக்கு மேலான நிலையில், தற்போது இதன் 72 மணி நேர முழுத் திறன் சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது. இதையடுத்து வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த வணிக உற்பத்தி அறிவிப்பின் மூலம், தமிழ்நாட்டின் மொத்த அனல் மின் உற்பத்தி திறன் 4,320 மெகாவாட்டிலிருந்து 5,120 மெகாவாடாக உயர்ந்துள்ளது. இதனால், குறிப்பாக கோடை கால மாலை நேரங்களில் ஏற்படும் மின்சார பற்றாக்குறை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரூ.10,602 கோடி மதிப்பிலான இந்த திட்டப் பணிகள் 2016 ஜனவரியில் தொடங்கப்பட்டு, 2019 ஜூலையில் வணிக உற்பத்தி தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் பல்வேறு காரணங்களால் திட்டம் தாமதமானது.

தற்போது, BHEL மற்றும் TNGECL பொறியாளர்களின் முயற்சியால், ஜனவரி 21 காலை 4.30 மணி முதல் ஜனவரி 24 காலை 4.30 மணி வரை நடைபெற்ற 72 மணி நேர முழுத் திறன் சோதனை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையில், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 1,320 மெகாவாட் திறன் கொண்ட உடங்குடி சூப்பர் கிரிட்டிக்கல் அனல் மின் நிலையத்தின், முதல் 660 மெகாவாட் யூனிட்டில் இந்த மாத இறுதிக்குள் நிலக்கரி எரிப்பு தொடங்கப்படும் . மின் வலையுடன் இணைத்த பிறகு ஆரம்பகால தொழில்நுட்ப சிக்கல்கள் சரிசெய்யப்பட்டு, பிப்ரவரி இரண்டாம் மற்றும் மூன்றாம் வாரங்களில் சோதனை உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

# மதுரை ரவுடி அழகுராஜ் என்கவுன்டர்... பரபரப்பு...!

மதுரை, ஜன. 27–

மதுரையைச் சேர்ந்த பிரபல ரவுடி அழகுராஜ் (எ) கொட்டு ராஜா மீது கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட 10–க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. கூலிப்படையைச் சேர்ந்தவராகக் கருதப்படும் இவர், சமீபத்தில் போலீஸ் வாகனத்தின் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தில் முக்கியக் குற்றவாளியாகத் தேடப்பட்டு வந்தார். கடந்த ஜனவரி 24–ஆம் தேதி, பிரபல ரவுடி வெள்ளைக்காளி என்பவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின், போலீசார் அவரை மீண்டும் சென்னை புழல் சிறைக்கு அழைத்துச் சென்றனர். பெரம்பலூர் அருகே உள்ள திருமாந்துறை சுங்கச்சாவடி பகுதியில் வாகனம் சென்றபோது, இரண்டு சொகுசு கார்களில் வந்த மர்ம கும்பல் ஒன்று போலீஸ் வாகனத்தின் மீது



நாட்டு வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது.


ரவுடி வெள்ளைக்காளியைத் தீர்த்துக்கட்டும் நோக்கில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், ஒரு உதவி ஆய்வாளர் உட்பட மூன்று போலீசார் காயமடைந்தனர். தாக்குதலுக்குப் பிறகு அக்கும்பல் சுங்கச்சாவடி தடுப்புகளை உடைத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் தப்பிச்சென்றது. இச்சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

இந்தத் துணிச்சலான தாக்குதலில் ஈடுபட்டவர்களைப் பிடிக்க 9 தனிப் படைகள் அமைக்கப்பட்டு தீவிரத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. வாகன எண்களை வைத்து துப்பு துலக்கிய போலீசார், நேற்று அழகுராஜ் மற்றும் அவரது கூட்டாளி ஒருவரைப் பிடித்தனர். கைது செய்யப்பட்ட அழகுராஜை, அவர் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்காகப் போலீசார் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அப்போது, அழகுராஜ் திடீரென மறைத்து வைத்திருந்த அரிவாளால் அங்கிருந்த போலீசாரைத் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றுள்ளார்.

இந்தத் தாக்குதலில் உதவி ஆய்வாளர் சங்கர் காயமடைந்தார். தற்காப்புக்காகவும், குற்றவாளி தப்பிப்பதைத் தடுக்கவும் போலீசார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் பலத்த காயமடைந்த அழகுராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்த அழகுராஜின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த போலீசார் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கூலிப்படைத் தலைவனாகச் செயல்பட்டு வந்த ரவுடி என்கவுன்டரில் கொல்லப்பட்ட இச்சம்பவம் பெரம்பலூர் மற்றும் மதுரை பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# குடியரசு தின விடுமுறை..!! ஒரே நாளில் ரூ.220 கோடி கல்லா கட்டிய டாஸ்மாக் நிர்வாகம்..!!




சென்னை, ஜன. 26–

தமிழ்நாட்டில் 77–வது குடியரசு தின விழாவை முன்னிட்டு (ஜனவரி 26) மாநிலம் முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளுக்கு நேற்று ( 26.01.2026)அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒரு நாள் இடைவெளியை சமாளிக்க, மதுப்பிரியர்கள் முந்தைய நாளே கடைகளில் அலைமோதியதால், தமிழகத்தின் மது விற்பனை புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

ஜனவரி 25–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் மட்டும் சுமார் 220 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கு மதுபானங்கள் விற்பனையாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் டாஸ்மாக் சில்லறை விற்பனை நிலையங்கள் மட்டுமின்றி, மனமகிழ் மன்றங்கள் (Clubs) மூலமாக மட்டும் 5 கோடியே 43 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த சில நாட்களுக்கு முன்புதான் சுமார் 839 கோடி ரூபாய்க்கு விற்பனை நடந்து முடிந்த நிலையில், தற்போது ஒரே நாளில் 200 கோடியை தாண்டியிருப்பது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

# சற்றே குறைந்து ஆறுதல் அளித்த தங்கம் விலை!



சென்னை, ஜன. 27–

தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.520 குறைந்து ரூ.1,19,680–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.65 குறைந்து ரூ.14,960–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை உயர்ந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.12 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.387–க்கும் பார் வெள்ளி 3 லட்சத்து 87 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



பழனியில் 77– வது குடியரசு தின விழாவை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் பழனி நகர தலைமையின் சார்பாக, 32 வது வார்டில், பழனி என்.பாலன் தேசிய கொடி ஏற்றி மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் , ஒன்றியம் , பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# புதிய வழித்தட பேருந்து துவக்கம்!

நாமக்கல், ஜன. 27–

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் ஏற்பாட்டில் புதன்சந்தை



பேருந்து நிறுத்தத்தில் நாமக்கல் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புதன்சந்தை, நைனாமலை வழியாக சேந்தமங்கலம் மற்றும் நாமக்கல் மரூர்பட்டி, பொட்டணம் வழியாக சேந்தமங்கலம் செல்லவும் நடைபெற்ற புதிய வழித்தட பேருந்து துவக்க விழாவில் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு VS. மாதேஸ்வரன் MP அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேருந்தினை கொடி அசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் நாமக்கல் தெற்கு மாவட்ட பொருளாளர் சசிகுமார், நாமக்கல் தெற்கு மாவட்ட இணை செயலாளர் E.J.தமிழரசு, நாமக்கல் தெற்கு மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் A.M.கந்தசாமி, புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் வேல்முருகன், குணசேகரன், திமுக ஒன்றிய செயலாளர் ஜெயப்பிரகாஷ், மின்னாம்பள்ளி முன்னாள் தலைவர் ராஜேந்திரன், தர்மலிங்கம், பொன்னுசாமி, போக்குவரத்து துறை கிளை மேலாளர், கிளை செயலாளர்கள், தீரன் தொழிற்சங்கம் சுரேஷ், சேகர் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நகர கிளை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 312 காலியிடங்கள்




Organization Name: Railway Recruitment Board
Notification No: 08/2025
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 312 Senior Publicity Inspector, Lab Assistant Gr. III (Chemist & Metallurgist), Chief Law Assistant, Junior Translator / Hindi, Staff and Welfare Inspector, Public Prosecutor, Scientific Assistant (Training) Posts
Place of Posting: All Over India
Starting Date: 30.12.2025
Last Date: 29.01.2026
Apply Mode: Online
Official Website: https://www.rrbapply.gov.in/


# தவெக-வுக்காக பிரத்யேகமாக டிவி சேனலை தொடங்கும் விஜய்..!!



சென்னை, ஜன. 27–

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தவெக தனது அரசியல் நிலைப்பாடுகளையும், செயல்பாடுகளையும் மக்களிடம் சமரசமின்றி கொண்டு செல்ல சொந்தமாக ஒரு செய்தித் தொலைக்காட்சியை (News Channel) தொடங்க அல்லது ஏற்கனவே இயங்கி வரும் ஒரு சேனலை வாங்க தீவிரமாக களம் இறங்கியுள்ளது.

இந்த ஊடக விரிவாக்கத்திற்காக தமிழகத்தின் இரண்டு முன்னணிச் செய்தி தொலைக்காட்சிகளுடன் தவெக தரப்பு ரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் ஒரு சேனல் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பக் கட்டமைப்பில் பின்தங்கியிருப்பது அந்தத் தரப்பிற்குச் சற்றுத் தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்றொரு சேனலுடனான பேச்சுவார்த்தை இறுதி கட்டத்தை எட்டியுள்ள போதிலும், "தொலைக்காட்சியின் தற்போதைய பெயரை மாற்றக் கூடாது" என்ற நிபந்தனை அந்தத் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. கட்சியின் பிரத்யேகத் தொலைக்காட்சியாக மாற்ற வேண்டுமானால் பெயர் மாற்றம் அவசியம் என்பதால், இந்த விவகாரத்தில் விஜய் என்ன முடிவு எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



## சினிமா துளிகள்..!

# ஜனநாயகனுக்கு தொடரும் சிக்கல்...!



நடிகர் விஜயின் 'ஜன நாயகன்' திரைப்படத்திற்கு தணிக்கை சான்று உடனே வழங்க உத்தரவிட்ட தனி நீதிபதி தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீடு வழக்கில் இன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், ஜன நாயகனுக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட தனி நீதிபதி உத்தரவு ரத்து செய்யப்படுவதாகவும் மீண்டும் இவ்வழக்கு தனி நீதிபதியின் விசாரணை அனுப்பி வைப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இரு நீதிபதிகள் உத்தரவை அடுத்து நீதிபதி ஆஷா மீண்டும் வழக்கை விசாரிக்கிறார்.

தனி நீதிபதி தீர்ப்புக்கு எதிராக தணிக்கை வாரியம் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகி இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கது.



# அதிபர் டிரம்பின் இன்றைய குறி தென் கொரியா: வரிவிதிப்பு பத்து சதவீதம் அதிகரிப்பு!

சியோல் , ஜன. 27–

தென் கொரியா பொருட்களுக்கான இறக்குமதி வரியை பதினைந்து சதவீதத்தில் இருந்து இருபத்து ஐந்து சதவீதமாக அமெரிக்க அதிபர் டிரம்ப் உயர்த்தி அறிவித்து இருக்கிறார்

உலக நாடுகள் தனது பேச்சை கேட்கவில்லை என்றால் வரி விதிப்பேன் என அதிபர் டிரம்ப் அச்சுறுத்தி வருகிறார் . பின்னரும் தனது உத்தரவுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் தாறுமாறாக வரி விதிப்பு அதிபர் டிரம்ப் அறிவிப்பு வெளியிடுவது வழக்கமாகி விட்டது . அந்தவகையில் டிரம்பின் பார்வை இன்று தென் கொரியா மீது சென்றுவிட்டது

வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுத்தி வருவதால் , தென் கொரியா பொருட்களுக்கான இறக்குமதி வரியை பதினைந்து சதவீதத்தில் இருந்து இருபத்து ஐந்து சதவீதமாக உயர்த்தி அதிபர் டிரம்ப் அதிரடி காட்டி இருக்கிறார் . இது குறித்து அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : அமெரிக்காவிற்கு வர்த்தக ஒப்பந்தங்கள் மிகவும் முக்கியமானவை . ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் ,



ஒப்புக்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைக்கு ஏற்ப எங்கள் வரிகளை குறைப்பதற்காக நாங்கள் விரைவாகச் செயல்பட்டு ள்ளோம் . நிச்சயமாக , எங்கள் வர்த்தகப் பங்காளிகளும் அவ்வாறே செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்

தென் கொரியா அமெரிக்காவுடனான தனது ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை . இரண்டாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு ஜூலை முப்பது ஆம் தேதி அதிபர் லீயும் நானும் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு சிறந்த ஒப்பந்தம் மேற்கொண்டோம் . இரண்டாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு அக்டோபர் இருபத்து ஒன்பது ஆம் தேதி நான் கொரியாவில் இருந்தபோது இந்த விதிமுறைகளை மீண்டும் உறுதிப்படுத்தினோம் . கொரிய சட்டசபை ஏன் இதை அங்கீகரிக்கவில்லை

கொரிய சட்டசபை ( Leg–islature ) எங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தத்தை இன்னும் சட்டமாக்காததால் , அது அவர்களின் தனிப்பட்ட உரிமை என்றாலும் , நான் இதன்மூலம் தென் கொரியாவின் கார்கள் , மரக்கட்டைகள் , மருந்துப் பொருட்கள் மற்றும் மற்ற அனைத்து பரஸ்பர வரிகளையும் பதினைந்து சதவீதத்தில் இருந்து இருபத்து ஐந்து சதவீதமாக உயர்த்தி உள்ளேன் . இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார் .

# ஹிந்து அல்லாதோருக்கு பத்ரிநாத் , கேதார்நாத் கோவில்களில் தடை!

கேதார்நாத், ஜன. 27–

உத்தரகண்ட் மாநிலத்தில் பத்ரிநாத் , கேதார்நாத் மற்றும் தங்களது கட்டுப்பாட்டில்



உள்ள பிற கோவில்களில் நுழைய , ஹிந்து அல்லாதோருக்கு தடை விதிக்கப்படுவதாக அக்கோவில்களை நிர்வகிக்கும் பத்ரிநாத் – கேதார்நாத் கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது

உத்தரகண்டில் முதல்வர் புஷ்கர் சிங் தாமி தலைமையில் பா . ஜ , ஆட்சி நடக்கிறது . இங்குள்ள பத்ரிநாத் , கேதார்நாத் , கங்கோத்ரி , யமுனோத்ரி ஆகியவை , ‘ சார்தாம்’ என்றழைக்கப்படுகின்றன . இந்நிலையில் , பத்ரிநாத் – கேதார்நாத் கோவில் நிர்வாகத் தலைவர் ஹேமந்த் திவேதி நேற்று கூறியுள்ளதாவது : பத்ரிநாத் , கேதார்நாத் கோவில்கள் மற்றும் கோவில் நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள மற்ற கோவில்களில் , ஹிந்து அல்லாதோர் நுழைய தடை விதிக்கப்படுகிறது . இது தொடர்பான தீர்மானம் , நிர்வாகக் குழுவின் வாரியக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் . குளிர்காலத்தை முன்னிட்டு , ஆறு மாதங்களாக மூடப்பட்டிருந்த பத்ரிநாத் கோவில் நடை , ஏப்ரல் இருபத்து மூன்றில் , பக்தர்களுக்காக மீண்டும் திறக்கப்படும் . இவ்வாறு அவர் கூறினார் . இதன்படி ,நூற்றாண்டுகள் பழமையான பத்ரிநாத் , கேதார்நாத் உள்ளிட்ட கோவில்களில் , ஹிந்துக்கள் மட்டுமே இனி அனும திக்கப்படுவர்.

# திருப்பதி ஏழுமலையான் கோவில் ரத சப்தமி விழா!



திருமலை, ஜன. 27–

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் சூரிய ஜெயந்தி விழா எனப்படும் ரத சப்தமி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்று முன்னெப்போதும் இல்லாத வகையில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்று கோவிலுக்குள் சென்றும், கோவிலின் நான்கு மாடவீதிகளில் நடந்த வாகனச் சேவையிலும் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடு, தேவஸ்தான அதிகாரி அனில்குமார் சிங்கால் ஆகியோர் பக்தர்களிடம் கலந்துரையாடி கருத்துக்களை கேட்டனர். அப்போது தேவஸ்தான அதிகாரிகள், ஊழியர்கள், காவல்துறை, மாவட்ட நிர்வாகம், ஸ்ரீவாரி சேவா சங்க தொண்டர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக பக்தர்கள் உள்பட அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

அப்போது அவர்கள் பேசுகையில், திருப்பதி தேவஸ்தானம் சார்பில் பக்தர்களுக்கு சாம்பார் சாதம், தக்காளி சாதம், தயிர் சாதம், சுண்டல், பாதாம் பால் உள்ளிட்ட 14 வகையான உணவுப் பொருட்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் வழங்கப்பட்டன. பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்க 2 ஆயிரம் சேவா சங்க தொண்டர்களும், கேலரிகளில் காத்திருந்த பக்தர்களுக்கு குடிநீர் வழங்க 750 பேரும், பக்தர் கூட்டத்தைக் கட்டுப்படுத்த 250 பேரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அன்னப்பிரசாதம், குடிநீர், தங்குமிடம் மற்றும் தங்களுக்கு வழங்கப்பட்ட பிற சேவைகளில் பக்தர்கள் மிகுந்த திருப்தியை வெளிப்படுத்தியதாக, கூறினர்.

# துணை மருத்துவ படிப்புகளுக்கு நீட் தேர்வு ஏற்க முடியாது!



File

சென்னை, ஜன. 27–

‘அலைடு ஹெல்த்’ எனப்படும் துணைமருத்துவ படிப்புகளுக்கும் ‘ நீட்’ தேர்வு கட்டாயம் என்ற தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையத்தின் ( என் . சி . ஏ எச் . பி . , ) அறிவிப்பை ஏற்கமுடியாது’ என தமிழ்நாடு அரசு பிசியோதெரபிஸ்டுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்

. எம் . பி . பி . எஸ் . , பி . டி . எஸ் . , மற்றும் படிப்புகள் அனைத்திற்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது . பிளஸ் இரண்டில் நல்ல மதிப்பெண்கள் பெற்றாலும் நீட் தேர்வில் வெற்றி பெற்றால் மட்டுமே மருத்துவப் படிப்பைத் தேர்ந்தெடுக்க முடியும் . நீட் தேர்வில் வெற்றி பெற முடியாதவர்களின் அடுத்த கட்ட மருத்துவ கனவாக துணைமருத்துவ படிப்புகள் உதவுகின்றன

. பி . எஸ்சி . , பிசியோதெரபி , ஆக்குபேஷனல் தெரபி , மருத்துவ ஆய்வகத் தொழில்நுட்பம் , ரேடியாலஜி , ஆப்டோமெட்ரி , டயாலிசிஸ் உட்பட ஐம்பத்து ஆறு வகை படிப்புகள் துணை மருத்துவ படிப்புகளாக கற்பிக்கப்படுகின்றன . இரண்டாயிரத்து இருபத்து மூன்றில் நர்சிங் படிப்பையும் நீட் தேர்வின் கீழ் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்ட போது ‘ இது மாநில திட்டத்திற்கானது’ என்று தமிழக அரசு மறுப்பு தெரிவித்ததால் நர்சிங் படிப்பு சேர்க்கப்படவில்லை . தற்போது இரண்டாயிரத்து இருபத்து ஆறு – – – இருபத்து ஏழு கல்வியாண்டு முதல் பிசியோதெரபி , ஆக்குபேஷனல் தெரபி உட்பட பல்வேறு துணை மருத்துவ படிப்புகளில் சேர்வதற்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது . தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டதற்கு தமிழ்நாடு அரசு பிசியோதெரபிஸ்டுகள் கண்டனம் தெரிவித்துள்ளனர் . அவர்கள் கூறியதாவது : டாக்டராக முடியாத கிராமப்புற , அரசுப்பள்ளி மாணவர்களின் அடுத்தகட்ட கனவாக துணை மருத்துவப் படிப்புகள் உள்ளன . துணைமருத்துவ படிப்புகளை தேர்ந்தெடுப்போரில் தொண்ணூறு சதவீதம் பேர் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள்தான் . பிளஸ் இரண்டில் நல்ல மதிப்பெண் பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் தகுதி அடிப்படையில் இப்படிப்பில் சேர்கின்றனர்

இதற்கும் தேசிய அளவில் நீட்தேர்வு தேவையென்றால் தனிப்பயிற்சிக்கு கட்டணம் செலுத்தி படிக்க வேண்டும் . பணம் கட்டி பயிற்சி பெற முடியாத கிராமப்புற , ஏழை மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் இந்த படிப்பையும் படிக்க முடியாது . டாக்டர்களுக்கு உதவியாக சேவை செய்யும் இப்படிப்புக்கு நீட் தேர்வு அவசியமில்லை . என் . சி . ஏ எச் . பி . , இந்த அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும் என்றனர்.

# ஜல்லிக்கட்டு போட்டியில் உயிரிழக்கும் வீரர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நிதியுதவி; இபிஎஸ் வாக்குறுதி!




சென்னை, ஜன, 27–

அதிமுக ஆட்சிக்கு வந்தால் ஜல்லிக்கட்டு போட்டியில் மாடு முட்டி உயிரிழக்கும் வீரர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வாக்குறுதி அளித்துள்ளார்.

நாமக்கல் சாலப்பாளையத்தில் ஜல்லிக்கட்டு போட்டியை இபிஎஸ் துவக்கி வைத்தார்; இதில் 600 காளைகள் மற்றும் 400 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். பின்னர் இபிஎஸ் கூறியதாவது: ஜல்லிக்கட்டு விளையாட்டு என்பது நமது முன்னோர்களின் பாரம்பரிய விளையாட்டு. இளைஞர்கள் காளையை அடக்கி திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு அற்புதமான விளையாட்டு. கலாசார அடையாளம். இப்படிப்பட்ட அற்புதமான ஜல்லிக்கட்டு விளையாட்டை ஏற்பாடு செய்த குழுவினருக்கு, மனதார வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஜல்லிக்கட்டு போட்டியில் ஈடுபட்டு இருக்கிற விளை யாட்டு வீரர்கள் காளைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்தால், அவர்களது குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

அதேபோல் ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்த வீரர்களுக்கு அரசு சார்பில் இன்சூரன்ஸ் செய்து கொடுக்கும். ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்து கொள்ளும் காளைகள் அனைத்தையும் கணக்கிட்டு, அந்த காளைகளுக்கு இன்சூரன்ஸ் செய்து தரப்படும். இவ்வாறு இபிஎஸ் கூறினார்.

# ராமதாசுடன் த.வெ.க. கூட்டணி பேச்சுவார்த்தை- செங்கோட்டையன் விளக்கம்!

சென்னை, ஜன. 27–



தமிழக வெற்றிக்கழக தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையனிடம், ஓ.பன்னீர் செல்வத்துடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடக்கிறதா? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு செங்கோட்டையன்,

யாருடன் கூட்டணி பேச்சு என வெளியில் கூறினால் டெல்லியில் இருந்து வந்து விடுகின்றனர் . என்ன பிரச்சனை என்பது எங்களுக்கு தானே தெரியும். யாருடன் கூட்டணி பேச்சு என்பதை சொல்லாமல் இருப்பது தான் சரி.

டி.டி.வி. தினகரன் சூழ்நிலை காரணமாக பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி முடிவை எடுத்திருக்கலாம்.

ராமதாசுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடந்து வருவதாக இப்போதுதான் செய்தி வந்தது. கூட்டணி விவகாரத்தில் நல்லதே நடக்கட்டும் என்றார்.

# 2040-க்குள் பிளாஸ்டிக்கால் ஏற்படும் உடல்நல பாதிப்பு இரு மடங்காகும்: ஆய்வில் அதிர்ச்சி தகவல்!



புதுடெல்லி, ஜன. 27–

உலகளவில் பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதை மையமாகக் கொண்டு, ஆண்டுதோறும் ஜூன் 5–ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படுகிறது.

இன்று எந்தளவுக்கு நவீனம் மனித வாழ்க்கைக்கு உதவுகிறதோ, அதே அளவுக்கு சுற்றுச்சூழலுக்கும், உடல் ஆரோக்கியத்துக்கும் கெடுதலை உண்டாக்குகிறது.

பிளாஸ்டிக் கழிவுகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மண்ணில் தங்கி சுற்றுச்சூழலுக்கும், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், இயற்கைக்கும் பேராபத்தை விளைவிக்கின்றன. பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் அப்புறப்படுத்துதல் ஆகியவை காலநிலை மாற்றத்திற்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

இந்நிலையில், லான்செட் ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில் வெளியான விவரம்:

பிளாஸ்டிக்கில் உள்ள ரசாயனங்கள் மற்றும் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் ஆகியவை ஆஸ்துமா, புற்றுநோய், மாரடைப்பு, நீரிழிவு, ஹார்மோன் சமநிலையின்மை ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன.

கருப்பையில் உள்ள சிசு முதல் முதுமை வரை அனைத்து நிலைகளிலும் பிளாஸ்டிக் மாசுபாடு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பிளாஸ்டிக் மாசுபாட்டினால் ஏற்படும் உடல்நலக் கோளாறுகளுக்கு உலகளவில் ஆண்டுக்கு குறைந்தது 1.5 டிரில்லியன் டாலர் செலவாகிறது. தற்போது பிளாஸ்டிக் உற்பத்தி பல நூறு மடங்குக்கு மேல் அதிகரித்து ள்ளது. தயாரிக்கப்படும் பிளாஸ்டிக்குகளில் 10 சதவீதத்துக்கும் குறைவானவையே மறு சுழற்சி செய்யப்படுகின்றன. இதனால் 8,000 மெகா டன்கள் பிளாஸ்டிக் கழிவுகள் பூமியை மாசுபடுத்துகின்றன.

வரும் 2040 ஆம் ஆண்டுக்குள் பிளாஸ்டிக் மாசுபாடுகள் இரு மடங்கிற்கும் அதிகமான சுகாதார அபாயங்களை ஏற்படுத்தும் என்றும், அவசர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் புவி வெப்பமடைதல், காற்று மாசுபாடு மற்றும் நச்சுத்தன்மை வெளிப்பாடு ஆகியவை அதிகரிக்கும் என அந்த ஆய்வு எச்சரிக்கை விடுக்கிறது.

# வாரம் 5 நாள் வேலை கேட்டு வங்கி ஸ்டிரைக்!

சென்னை, ஜன. 27–

வாரத்துக்கு ஐந்து நாள்கள் வேலை என்ற கோரிக்கையை வலியுறுத்தி , வங்கி ஊழியர் சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றன. வங்கி ஊழியர்களுக்கு , மாதத்தின் இரண்டு , நான்காம் சனிக்கிழமை மற்றும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகள் வார விடுமுறை . மீதமுள்ள இரண்டு சனிக்கிழமையும் விடுமுறை விடக்கோரி , ஒருங்கிணைந்த வங்கி ஊழியர்கள் அமைப்பான யு . எப் . பி . யு . , சார்பில் , ஜன 27–ல் நாடு தழுவிய வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை விடுமுறையால் ஏற்படக்கூடிய பணி நேரத்தை , திங்கள் முதல் வெள்ளி வரை கூடுதலாக நாற்பது நிமிடம்




பணியாற்ற ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது . ஆனால் , அரசு இதுவரை அதை அறிவிக்காமல் உள்ளது . அரசுடன் நடத்தப்பட்ட விரிவான பேச்சிலும் , எங்கள் கோரிக்கை மீது உறுதி அளிக்கப்படாததால் , வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டதாக , அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்க பொதுச்செயலர் வெங்கடாசலம் தெரிவித்தார் . வேலைநிறுத்தத்தால் பொதுத்துறை வங்கிகளில் ரொக்க டிபாசிட் , ரொக்கம் எடுத்தல் , காசோலை கிளியரிங் பாதிக்கும் யு . பி . ஐ , பரிவர்த்தன , இணையவழி பேங்கிங் பாதிக்காது ; சில இடங்களில் ஏ . டி . எம் . , ரொக்கம் வழங்காத நிலை வரலாம் ஹெச் . டி . எப் . சி . , – ஐ . சி . ஐ சி . ஐ , ஆக்சிஸ் போன்ற தனியார் வங்கிகள் பங்கேற்காததால் , அவற்றின் சேவை பாதிக்கப்படாது.

# “இனி அண்ணி” அல்ல “அம்மா” - பிரேமலதா!



சாத்தூர், ஜன. 27–

தே.மு.தி.க. தலைவர் பிரேமலதா கோவில்பட்டியில் நடந்த கூட்டத்தில் நேற்று பேசியதாவது:– தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் காட்டிய வழியில் தொடர்ந்து மக்களுக்காக பாடுபடுவேன். அவர் தொடங்கிய அன்னதானத் திட்டத்தை தற்பொழுது வரை கேப்டனின் கோவிலில் தினமும் நடைபெற்று வருகிறது. கடந்த 2024 பாராளுமன்றத் தேர்தலில் விருதுநகர் மாவட்ட மக்களின் சார்பில் போட்டியிட்ட விஜய பிரபாகரன் தான் வெற்றி பெற்றார். ஆனால் அறிவிக்கப்பட்டது வேறொருவர். கடந்த சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற தே.மு.தி.க. மாநாட்டில் கூடிய தொண்டர்கள் மூலம் நமது வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது. கேப்டன் விஜயகாந்த் விட்டுச்சென்ற பணியை இதுவரை அண்ணியாக இருந்து செயல்படுத்தி வந்த நான், இனிமேல் அம்மாவாக மக்களின் குறைதீர்க்க பாடுபடுவேன். மக்கள் விரும்பும் கூட்டணியையே தே.மு.தி.க. கையில் எடுக்கும் என்றும் தே.மு.தி.க. இணையும் கூட்டணியை நிச்சயம் ஆட்சியைப் பிடிக்கும். அப்பொழுது மக்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் தே.மு.தி.க. நிச்சயமாக செய்து கொடுக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# ஒற்றை இலக்கத்தில் ‘ சீட்’; கமலுடன் தி.மு.க. பேச்சு!



சென்னை, ஜன. 27–

‘ மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலை , சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் , தி . மு . க , அமைச்சர்கள் சேகர்பாபு , சாமிநாதன் மற்றும் மா . கம்யூ . , மாநிலச் செயலர் சண்முகம் ஆகியோர் சந்தித்து பேசினர்

இது குறித்து , ம . நீ . ம , கட்சி நிர்வாகிகள் கூறியதாவது : வரும் சட்டசபை தேர்தலில் , ‘ டார்ச் லைட்’ சின்னம் எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது . எனவே , குறைந்தது பன்னிரண்டு தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என விரும்புகிறோம் . அதற்காக , இரட்டை இலக்க தொகு திகளை , தி . மு . க , விடம் கேட்க முடிவெடுக்க ப்பட்டுள்ளது . தி . மு . க , கூட்டணியில் ம . நீ . ம , கட்சிக்கு ஒற்றை இலக்கத்தில் தொகுதிகளை ஒதுக்கவும் , உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைத்து , வெற்றி பெற வைக்கவும் , முதல்வர் ஸ்டாலின் தரப்பில் , கமலிடம் அமைச்சர் சேகர்பாபு பேசியுள்ளார் . எங்கள் விருப்பம் நிறைவேறுமா என தெரியவில்லை . இவ்வாறு அவர்கள் கூறினர்


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020